# சீர்காழி நகராட்சி



2019 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24.10.2019 வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரனக் கூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திரு.க.மெய்ப்பொருள்.B.E.,
தனி அலுவலர் (ம) ஆணையர்(பொ)
சீர்காழி நகராட்சி.

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1<br>402 | இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி பணியிடையே 17.05.1996ல் இறந்த திரு.கலியமூர்த்தி, த/பெ.பொன்னன் அவர்களின் வாரிசுதாரும் மனைவியுமான திருமதி.க.நாகம்மாள் என்பவருக்கு 18.05.1996 முதல் 30.09.2004 வரையிலான ஒய்வூதிய பயன்கள் நகராட்சியால் வழங்கப்பட்டு உடன் பணிபதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று உள்ளாட்சி நிதிதணிக்கைதுறை அவர்களின் கடிதம் 20697/கடித(2)/2018, நாள்–20.05.2019 ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நகராட்சியின் மூலம் ஒய்வூதியப் பயன்கள் வழங்கப்பட்ட பின் பிற்காலத்தில் தணிக்கை தடை ஏற்பட்டால் அதற்கு தனியரே முழுபொறுப்பாக்கப்படும் என இந்நகராட்சி செயல்முறை எண்–1761/2019/பி2 ல் தெரிவிக்கப்பட்டு மேலும் ரோட்டரி பப்ளிக் வழக்கறிஞர் மூலம் உறுதிமொழி பத்திரம் தயார்செய்து உடன் நகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி தனியரிடமிருந்து உறுதிமொழி பத்திரம் பெறப்பட்டுள்ளது. எனவே தனியருக்கு ஒய்வூதிய பணபயன்கள் உள்ளாட்சி நிதிதணிக்கை சென்னை அவர்களின் கடிதம் மற்றும் நிபந்தனைகளின்படி இந்நகராட்சியின் மூலம் ரூ.184084/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–1761/2019/இபி2) | அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-2<br>403 | மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் 2011–12 நிதியறிக்கை கூட்டத்தொடரில் தஞ்சாவூர் மற்றும் திருப்பூர் மண்டலங்களிலுள்ள 35 நகராட்சிகள் மற்றும் 9 மாநகராட்சிகளில் உள்ள தெருவிளக்குகளில் தனியார் பங்களிப்புடன் மின்சேமிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பினை செயல்படுத்துவதற்காக அரசாணை எண்.88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை, நாள்24.09.2012ல் பொது ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு, பொதுத்துறை மற்றும் தனியார் பங்களிப்புடனும் (PPP Mode) மேற்படி பணியினை மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி | அனுமதிக்கப்படுகிறது. |

இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 1716. எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை பராமரிக்க பொது ஒப்பந்தப்புள்ளி கோர தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு நகர் மன்ற தீர்மான எண்.132 .நாள்.09.05.2012 –ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி முதன் முறையாக 22.03.2013 அன்று தொழில்நுட்ப தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 6 நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி குழுவால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் 3 நிறுவனங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களாக தேர்வு செய்யப்பட்டு 17.06.2013 அன்று RFP ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இதில் கூர்ந்தாய்வு செய்ததில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த M/s. சிட்டிலம் இந்தியா பிரைவேட் லிமிட்டேட் புதுடெல்லி நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு 18.09.2013 அன்று மின்பயனீட்டுத் தணிக்கை (IGA) மேற்கொள்வதற்கு மட்டும் Letter of Intent வழங்கப்பட்டது. மேற்படி நிறுவனம் ஒப்பந்தபுள்ளி விதிகளின் படி 5% காப்பீட்டுத் தொகை உரிய காலத்திற்குள் செலுத்தாததினால், 20.01.2016 அன்று மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ரத்துசெய்யப்பட்டு, மீளவும் இரண்டாம் முறையாக மேற்படி பணியில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களை தேர்வு செய்யும் பொருட்டு (RFQ) 11.07.2016 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட 3 நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | நிறுவனங்களின் பெயர் | நிறுவனங்களின் கூட்டு பங்குதாரர் |
|---|---|---|
| 1 | Schnell Energy Equipments (P), Ltd., 9/175, Railway Feeder Road. Periyanayakan Palayam, Coimbatore. | SALZER Electronics Pvt., Ltd. Sami Chetty Palayam, Coimnatore. |
| 2 | KCP Engineers (P) Ltd., 117B, Periyar Nagar, Puliyankulam,Coimbator | Sabari Electrical. No.5. Kathiresan Street. Gannamoorthi Nagar, Ambatur, Chennai |
| 3 | Energy Efficiency Services Ltd., 4th Flower, Sevabhavan, RK Puram. New Delhi. | |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை பரிசீலித்து ஆய்வு செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி குழு அமைக்கப்பட்டது. அதன்படி மேற்படி குழுவின் உறுப்பினர்கள் (Evaluation Committee) கூர்ந்தாய்வு செய்ததில் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்ட 3 நிறுவனங்களில் கீழ்க்கண்ட 2 நிறுவனங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களாக தேர்வு செய்யப்பட்டது.

| வ.எண் | நிறுவனங்களின் பெயர் |
|---|---|
| 1 | Schnell Energy Equipments (P), Ltd., 9/175, Railway Feeder Road. Periyanayakan Palayam, Coimbatore. |
| 2 | KCP Engineers (P) Ltd., 117B, Periyar Nagar, Puliyankulam,Coimbator. |

1. அளிக்கப்பட்ட இரண்டு ஒப்பந்தங்களில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை நிறைவு செய்து தகுதியான KCP Engineers (P) Ltd., Coimbatore நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வழிகாட்டுதலின் படி சீர்காழி நகர்மன்ற தீர்மான எண்–07 நாள்.28.11.2016 ன் படி மன்றத்தால் ஏற்க்கப்பட்டுள்ளது.

2. ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலாண்டு மேற்படி நிறுவனத்திற்கு மொத்த செலவினத் தொகையில் இந்நகராட்சிக்கு ரூ.1,18,97,466/– மற்றும் IGA ஆய்வு கட்டணம் ரூ.2,89,117/– ஆக மொத்தம் ரூ.1,21,86,583/– ஏற்கனவே உள்ள மின் உதிரி பாகங்களை திருப்பி எடுத்துக்கொள்வதன் மூலம் மேற்படி நிறுவனத்தினர் ரூ. 51,770/– அளிப்பதால் நிகர மொத்த செலவினத் தொகை ரூ. 1,18,97,466/– ல் பொருட்கள் பெறப்பட்டவுடன் 25 சதவீதத் தொகை ரூ. 29,74,366.50/– நகராட்சியால் வழங்க வேண்டும். மேலும் மேற்படி பொருட்களை பொருத்திய பின்னர் 25 சதவீத தொகை ரூ. 29,74,366.50/– வழங்கப்பட வேண்டும்மீதமுள்ள தொகையினை நான்கு சம தவணைகளாக பிரித்து கீழ்க்கண்டவாறு இரண்டாம் ஆண்டு முதல் வரும் நான்காண்டுகளில் 8 சதவீதம் கூட்டு வட்டியுடன் மேற்படி நிறுவனத்திற்கு அளிக்கவும் மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வருடம் | வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| 1 | முதல் வருடம் | 12.50 சதவீத தொகை (ரூ. 14,87,183.25/–) மற்றும் 50. 00 சதவீத தொகை (ரூ. 59,48,733/–)க்கான 8.00 சதவீதம் வட்டித் தொகை (ரூ. 4,75,898.64/–) ஆக மொத்தம் ரூ. 19,63,081.89/– |
| 2 | இரண்டாம் வருடம் | 12.50 சதவீத தொகை (ரூ. 14,87,183.25/–) மற்றும் 37. 50 சதவீத தொகை (ரூ. 44,61,549.75/–)க்கான 8.00 சதவீதம் வட்டித் தொகை (ரூ.3,56,923.98/–) ஆக மொத்தம் (ரூ.18,44,107.23/–) |
| 3 | மூன்றாம் வருடம் | 12.50 சதவீத தொகை (ரூ. 14,87,183.25/–) மற்றும் 25. 00 சதவீத தொகை (ரூ. 29,74,366.50/–)க்கான 8.00 சதவீதம் வட்டித் தொகை (ரூ. 2,37,949.32/–) ஆக மொத்தம் (ரூ. 17,25,132.57/–) |
| 4 | நான்காம் வருடம் | 12.50 சதவீத தொகை (ரூ. 14,87,183.25/–) மற்றும் 12. 50 சதவீத தொகை (ரூ.14,87,183.25/–)க்கான 8.00 சதவீதம் வட்டித் தொகை (ரூ.1,18,974.66/–) ஆக மொத்தம் (ரூ. 16,06,157.91/–) |

1. இத்திட்டத்திற்கான தொகை IUDM திட்டத்தின் ஒதுக்கீடு தொகையுடன் பொதுநிதி கொண்டு மேற்கொள்ளவும் மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
2. மேலும், மின் பயனீட்டு அளவை தணிக்கை செய்வதற்காக ஆற்றல் திறன் தணிக்கையாளர்கள் மூலம் (IGA) இந்நகராட்சிக்குட்பட்ட தெரு மின் விளக்குகளுக்கான மின் பயனீட்டுஅளவை தணிக்கை செய்வதற்காகும் செலவை இந்நகராட்சியின் பங்குத் தொகையாக ரூ. 2,89,117/– செலுத்தவும் மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
3. இத்திட்டம் 10 ஆண்டு கால செயல்முறை திட்டமாவதால் ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் செலவினங்களை அந்தந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்துக் கொள்ள மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**4.** ஒவ்வொரு ஆண்டும் அமைக்கப்படும் புதிய தெருவிளக்குகளை மேற்காணும் விலை விகிதத்தில் அமைக்கவும், இதனை தொடர்ந்து இதன் பராமரிப்பினை பராமரிப்பின் விலை விகிதத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நகர்மன்ற தீர்மான எண்–07 நாள்.**28.11.2016** க்கு ஏற்க்கப்பட்ட தீர்மானத்திற்கு பணிக்கான ஒப்பந்தம் **06.12.2017** அன்று கையெழுத்திடும் பொழுது கீழ் கண்ட விவரப் படி மாற்றி அமைத்திட வேண்டியது அவசியமானதால் ஒப்பந்தத்தின் படி மாற்றி அமைக்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் அதற்கான கூடுதல் செலவினத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

| sl.No | Description of Item | As per Council Resolution and Estimate | | | As per Agreement | | | Difference | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Qty | Rate | Amount | Qty | Rate | Amount | Qty | Rate | Amount |
| 1 | Conversion of 15w LED Fitting | 223 | 5400 | 1204200 | 260 | 5400 | 1404000 | 37 | 5400 | 199800 |
| 2 | Conversion of 20w LED Fitting | 919 | 6400 | 5881600 | 912 | 6400 | 5836800 | -7 | 6400 | -44800 |
| 3 | Conversion of 40w LED Fitting | 0 | 9450 | 0 | 12 | 9450 | 113400 | 12 | 9450 | 113400 |
| 4 | Conversion of 60w LED Fitting | 0 | 13500 | 0 | 25 | 13500 | 337500 | 25 | 13500 | 337500 |
| 5 | Control Unit 4 KVA | 65 | 32000 | 2080000 | 106 | 32000 | 3392000 | 41 | 32000 | 1312000 |
| 6 | Control Unit 5 KVA | 10 | 62000 | 620000 | 36 | 62000 | 2232000 | 26 | 62000 | 1612000 |
| 7 | Control Unit 8 KVA | 8 | 80000 | 640000 | 7 | 80000 | 560000 | -1 | 80000 | -80000 |
| 8 | 3 Phase 8 KVA Contrl unie | 3 | 120000 | 360000 | 0 | 120000 | 0 | -3 | 120000 | -360000 |
| 9 | 3 Phase 12 KVA Contrl unie | 2 | 150000 | 300000 | 1 | 150000 | 150000 | -1 | 150000 | -150000 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | Lamp Monitoring device | 86 | 7500 | 645000 | 36 | 7500 | 270000 | -50 | 7500 | -375000 |
| 11 | CCMC Cost | 1 | 166666 | 166666 | 1 | 166666 | 166666 | 0 | 166666 | 0 |
| | Total | | | **11897466** | | | **14462366** | | | **2564900** |

ஒப்பந்தத்தின் படி – 14462366.00

மதிப்பீட்டின் படி – 11897466.00

கூடுதல் தொகை – - **2564900.00**

எனவே கீழ்கண்டவாறு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலாண்டு மேற்படி நிறுவனத்திற்கு மொத்த செலவினத் தொகையில் இந்நகராட்சிக்கு ரூ.1,44,62,367/– மற்றும் IGA ஆய்வு கட்டணம் ரூ.2,21,500/– ஆக மொத்தம் ரூ.1,46,83,867/– ஏற்கனவே உள்ள மின் உதிரி பாகங்களை திருப்பி எடுத்துக்கொள்வதன் மூலம் மேற்படி நிறுவனத்தினர் ரூ. 55,365/– அளிப்பதால் நிகர மொத்த செலவினத் தொகை ரூ. 1,46,28,502/– ல் பொருட்கள் பெறப்பட்டவுடன் 25 சதவீதத் தொகை ரூ. 36,57,125.50/– நகராட்சியால் வழங்க வேண்டும். மேலும் மேற்படி பொருட்களை பொருத்திய பின்னர் 25 சதவீத தொகை ரூ. 36,57,125.50/– வழங்கப்பட வேண்டும்மீதமுள்ள தொகையினை நான்கு சம தவணைகளாக பிரித்து கீழ்க்கண்டவாறு இரண்டாம் ஆண்டு முதல் வரும் நான்காண்டுகளில் 8 சதவீதம் கூட்டு வட்டியுடன் மேற்படி நிறுவனத்திற்கு அளிக்கவும் மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வருடம் | வழங்கப்படும் தொகை |
|---|---|---|
| 1 | முதல் வருடம் | 12.50 சதவீத தொகை (ரூ. 18,28,562.75/–) மற்றும் 50. 00 சதவீத தொகை (ரூ. 73,14,251.00/–)க்கான 8.00 சதவீதம் வட்டித் தொகை (ரூ. 5,85,140.08/–) ஆக மொத்தம் ரூ. 24,13,702. 83 /–) |
| 2 | இரண்டாம் வருடம் | 12.50 சதவீத தொகை (ரூ. 18,28,562.75/–) மற்றும் 37. 50 சதவீத தொகை (ரூ. 54,85,688.25/–)க்கான 8.00 சதவீதம் வட்டித் தொகை (ரூ.4,38,855.06/–) ஆக மொத்தம் (ரூ.22,67,417.81/–) |
| 3 | மூன்றாம் வருடம் | 12.50 சதவீத தொகை (ரூ.18,28,562.75/–) மற்றும் 25. 00 சதவீத தொகை (ரூ. 36,57,125.50/–)க்கான 8.00 சதவீதம் வட்டித் தொகை (ரூ. 2,92,570.04/–) ஆக மொத்தம் (ரூ. 21,21,132.79/–) |
| 4 | நான்காம் வருடம் | 12.50 சதவீத தொகை (ரூ.18,28,562.75/–) மற்றும் 12. 50 சதவீத தொகை (ரூ.18,28,562.75/–)க்கான 8.00 சதவீதம் வட்டித் தொகை (ரூ.1,46,285.02/–) ஆக மொத்தம் (ரூ. 19,74,847.77/–) |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இத்திட்டத்திற்கான தொகை IUDM திட்டத்தின் ஒதுக்கீடு தொகையுடன் பொதுநிதி கொண்டு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr>
<td></td>
<td>3. மேலும், மின் பயனீட்டு அளவை தணிக்கை செய்வதற்காக ஆற்றல் திறன் தணிக்கையாளர்கள் மூலம் (IGA) இந்நகராட்சிக்குட்பட்ட தெரு மின் விளக்குகளுக்கான மின் பயனீட்டுஅளவை தணிக்கை செய்வதற்காகும் செலவை இந்நகராட்சியின் பங்குத் தொகையாக ரூ. <u>2,21,500/–</u> செலுத்தப்பட்டதற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>4. இத்திட்டம் 10 ஆண்டு கால செயல்முறை திட்டமாவதால் முதலாம் ஆண்டு ஜனவரி –2018 முதல் டிசம்பர் – 2018 வரை பராமரிப்பு செலவிற்கு ரூ.14,03,284/– வழங்கப்பட்டதையும் இரண்டாம் ஆண்டு ஜனவரி–2019 முதல் டிசம்பர்–2019 வரை பராமரிப்பிற்கான உத்தேச செலவினம் ரூ.14,00,000/– ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மேலும் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்–2123/2012/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-3<br>403</td>
<td>உள்ளாட்சி தேர்தல் – 2019 தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.3133/2019/ தே.பொ./ நாள்.19.09.2019 சுற்றறிக்கை எண். ஊ – 21/2019 – ன் படி உள்ளாட்சி அமைப்புகளுக்கான சட்டமன்ற தொகுதி வாக்காளர் பட்டியல் அடிப்படையில் வாக்காளர் பட்டியல் தயார் செய்தல், நிரைவு செய்யப்பட்ட புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலை பதிவிறக்கம் செய்தல், வாக்காளர் பட்டியலை அச்சு பணிக்கு ஒப்படைத்தல், வாக்காளர் பட்டியலை அச்சிட்டு அரசியல் கட்சிகளுக்கு வழுங்குதல், வாக்குச்சாவடி மையங்களின் எல்லைகள் தொடர்பான வரைப்படம் தயாரித்தல், நுஏஞ தேர்தல் தொடர்பான செலவினங்களுக்கு பொதுநிதியிலிருந்து உத்தேச செலவினங்களுக்கு ரூ.1,00,000 /– வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.1228/2019/அ.1<br>அலுவலக குறிப்பு : அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-4<br>405</td>
<td>சீர்காழி நகராட்சி – வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கால்வாய்கள் மற்றும் அதனை ஒட்டியுள்ள பாலத்தில் மண்நிரம்பி தண்ணீர் வெளியேற இயலாமல் மண்மேடுகளை Aircompressure Lorry வாகனத்தின் மூலம் சரிசெய்திட வாடகை அடிப்படையில் அமர்த்தி பணிகள் மேற்கொள்ள 10.09.2019 –ல் ஒப்பந்தபுள்ளிகள் வந்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>பணி விபரம்</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை Aircompressure Lorry ஓட்டுனர் மற்றும் கூலி உட்பட ஒரு நாளைக்கு</th></tr>
<tr><td>1</td><td>திரு.ஆர்.தனராஜ்<br>கீழதென்பாதி<br>சீர்காழி.</td><td>நகரில் உள்ள கால்வாய்கள் அதனை ஒட்டியுள்ள பாலத்தில் மண்நிரம்பி தண்ணீர் வெளியேற இயலாமல் மண்மேடுகளைஅகற்றுதல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் Aircompressure Lorry கொண்டு பணி மேற்கொள்ளுதல்</td><td>ரூ 3330/–</td></tr>
</table></td>
<td>அனுமதிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 2 | திரு.ஆர்.கலைவா ணன்<br>தேர் கீழ வீதி<br>சீர்காழி. | நகரில் உள்ள கால்வாய்கள் அதனை ஒட்டியுள்ள பாலத்தில் மண்நிரம்பி தண்ணீர் வெளியேற இயலாமல் மண்மேடுகளைஅகற்றுதல் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் Aircompressure Lorry கொண்டு பணி மேற்கொள்ளுதல் | ரூ 3500/– |

அலுவலக குறிப்பு.

அ) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்1 –ல் குறிப்பிடப்பட்டுள்ள திரு. ஆர்.தனராஜ் கீழதென்பாதி என்பவர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

ஆ) வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் அவசர அவசியம் கருதி பணி செய்திட தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கவும் பணிகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2341 /2019/எச்.1)

---

**பொருள் எண்-5**
**406**

சீர்காழி நகராட்சி – வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நகரில் ஆங்காங்கே காணப்படும் வாய்க்கால்கள் மற்றும் பாலங்களில் அடைப்புகளை சரி செய்திட ஒப்பந்த அடிப்படையில் (JCB) இயந்திரம் மற்றும் டிராக்டர் வாகனம் கொண்டு பணிகள் மேற்கொள்ள 10.09.2019–ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வந்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பணி விபரம் | ஒப்பந்தபுள்ளி தொகை Aircompressure Lorry ஓட்டுனர் மற்றும் கூலி உட்பட ஒரு நாளைக்கு | |
|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.தனராஜ்<br>கீழதென்பாதி<br>சீர்காழி. | நகரில் ஆங்காங்கே உள்ள வாய்க்கால்கள் மற்றும் பாலங்களில் அடைப்புகளை JCB இயந்திரம் மற்றும் டிராக்டர் வாகனம் கொண்டு பணிகள் மேற்கொள்ளுதல் | JCBஇயந்திரம் 1 மணி நேரத்திற்கு<br>டிராக்டர் ஓட்டுனர் மற்றும் கூலி உட்பட ஒரு நாளைக்கு | ரூ 850/–<br>ரூ 2800/– |
| 2 | திரு.ஆர்.கலைவாணன்<br>தேர் கீழ வீதி<br>சீர்காழி. | நகரில் ஆங்காங்கே உள்ள வாய்க்கால்கள் மற்றும் பாலங்களில் அடைப்புகளை JCB இயந்திரம் மற்றும் டிராக்டர் வாகனம் கொண்டு பணிகள் மேற்கொள்ளுதல் | JCBஇயந்திரம் 1 மணி நேரத்திற்கு<br>டிராக்டர் ஓட்டுனர் மற்றும் கூலி உட்பட ஒரு நாளைக்கு | ரூ 900/–<br>ரூ 2900/– |

அனுமதிக்கப்படுகிறது.

<table>
<tr><td></td><td>அலுவலக குறிப்பு.<br>அ) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்1 –ல் குறிப்பிடப்பட்டுள்ள திரு. ஆர்.தனராஜ் கீழதென்பாதி என்பவர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.<br>ஆ) வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளதால் அவசர அவசியம் கருதி பணி செய்திட தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கவும் பணிகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2340 /2019/எச்.1</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்-6<br>407</td><td>பொதுசுகாதாரப்பிரிவு– வாகனம் TN51AZ -6752 டம்பர் பிளேசர் லாரிக்கு தகுதிசான்று பெரும் பொருட்டு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ 36000 க்கு நகர்மன்ற தீர்மான எண்: 305 நாள்:7.03.2019 அனுமதித்து அவ்வாகனத்தில் பழுது நீக்க பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரியதில் 18.09.2019 அன்று கீழ்கண்ட ஒப்பந்த புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்தபுள்ளி தொகை</td></tr>
<tr><td>1</td><td>திரு.கே.செல்வம்<br>12 ஊழியக்காரன் தோப்பு , சீர்காழி</td><td>ரூ.35,700</td></tr>
<tr><td>2</td><td>பி.அன்பழகன்<br>1.வல்லாய்பட்டேல் தெரு, அகனி</td><td>ரூ.37,700</td></tr>
</table>
மேற்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண்1 ல் –குறிப்பிட்டுள்ள திரு. கே.செல்வம்12 ஊழியக்காரன் தோப்பு சீர்காழி என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(அ–கு)1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனும வழங்கலாம்.<br>(ந.க.எண் 2827 /2019 /எச்1)</td><td>அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>பொருள் எண்-7<br>408</td><td>சீர்காழி நகராட்சி குடிநீர் வநியோகம் செய்யும் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் நீர்மூழ்கி மோட்டார்கள் உயர் மற்றும் தாழ் மின் அழுத்தம் காரணமாக நகராட்சி பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட 30 HP –7 எண்ணிக்கை, 3 HP –1 எண்ணிக்கை மற்றும் 1 HP –1 எண்ணிக்கை ஆகிய 9 முறை மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு அவசர அவசியம் கருதியும் மற்றும் பொது மக்களின் நலன் கருதியும் நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15- ன்படி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் R.தனராஜ், ஒப்பந்ததாரர், சீர்காழி. அவர்களாள் வழங்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை ரூ.265416/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்–1646/2019/இ1)<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனி அலுவலரின் முன் அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதையும், பணி மேற்கொன்டதையும் மற்றும் ரூ.265416/– தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப்படுகிறது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்-8 409 | சீர்காழி நகராட்சி குடிநீர் வநியோகம் செய்யும் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மின் மோட்டார் அறையில் 50 HP பேனல் போர்டு மற்றும் காப்பர் ஒயர் யேபிள் புதியதாக மாற்றி தரும் பணிக்கு அவசர அவசியம் கருதியும் மற்றும் பொது மக்களின் நலன் கருதியும் நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15- ன்படி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் R.தனராஜ், ஒப்பந்ததாரர், சீர்காழி. அவர்களாள் வழங்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை ரூ.156245/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்–1646/2019/இ1)<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனி அலுவலரின் முன் அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதையும், பணி மேற்கொன்டதையும் மற்றும் ரூ.156245/– தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-9 410 | சீர்காழி நகராட்சி குடிநீர் வநியோகம் செய்யும் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் நீர்மூழ்கி மோட்டார்கள் உயர் மற்றும் தாழ் ணமின் அழுத்தம் காரணமாக நகராட்சி பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட 30 HP –5 எண்ணிக்கை, 50 HP –1 எண்ணிக்கை மற்றும் 15 HP –1 எண்ணிக்கை ஆகிய 7 முறை மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணிக்கு அவசர அவசியம் கருதியும் மற்றும் பொது மக்களின் நலன் கருதியும் நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15- ன்படி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் R.தனராஜ், ஒப்பந்ததாரர், சீர்காழி. அவர்களாள் வழங்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை ரூ.241857/- இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்–1646/2019/இ1)<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனி அலுவலரின் முன் அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதையும், பணி மேற்கொன்டதையும் மற்றும் ரூ.241857/– தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்படுகிறது. |
| பொருள் எண்-10 411 | சீர்காழி நகராட்சி பொது நிதி குடிநீர் வநியோகம் செய்யும் குடிநீர் பகிர்மான குழாய் சர்வமானியா தெரு, VOC நகர் இணைப்பு சாலை மற்றும் குடிநீர் பிரதான குழாய் நிம்மேலி ஆகிய இடங்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சரிசெய்யும் பணிக்கு அவசர அவசியம் கருதியும் மற்றும் பொது மக்களின் நலன் கருதியும் நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15- ன்படி நகராட்சி பொது நிதியின் கீழ் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் R.தனராஜ், ஒப்பந்ததாரர், சீர்காழி. அவர்களாள் வழங்கப்பட்ட குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டு பட்டியல் தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | அனுமதிக்கப்படுகிறது. |

(ந.க.எண்–1646/2019/இ1)

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அலுவலரின் முன் அனுமதிப்பெற்று பணி உத்திரவு வழங்கியதையும், பணி மேற்கொன்டதையும் மற்றும் ரூ.100000/– தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

---

பொருள் எண்-11
412

சீர்காழி நகராட்சி – இந்நகராட்சியில் 2019–2020 ஆம் ஆண்டில் நடைப்பெற்ற பல்வேறு திட்டங்களின் கீழ் செய்யப்பட்ட பணிகளின் விவரத்தினை தினசரி நாளிதழ் மற்றும் தொழில் மலர்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டுள்ளது அதற்கான பட்டியல் தொகை கீழ் கண்ட தினசரி நாளிதழ்களில் இருந்து வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | தேதி | தினசரி நாளிதழ் பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | 03.10.2019 | தினமணி தொழில் மலர் – 2019 | 19950.00 |
| 2 | 07.10.2019 | தினத் தந்தி தொழில் மலர் – 2019 | 19199.00 |
| 3 | 05.10.2019 | தீக்கதிர் நாளிதழ் | 9975.00 |
| 4 | 07.10.2019 | தினமலர் தொழில் மலர் – 2019 | 31500.00 |
| 5 | 07.10.2019 | தினகரன் தொழில் மலர் – 2019 | 18900.00 |
| | | கூடுதல் | 99524.00 |

மேற்படி நாளிதழ் மற்றும் தொழில் மலர்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.99524.00 ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
(ந.க.எண்–3471/2017/இ1)

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்படுகிறது.

---

பொருள் எண்-12
413

சீர்காழி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளில் உள்ள தெருக்களில் உள்ள மின் கம்பங்களில் புதியதாக மின் விளக்குகள் அமைத்து தர மின் கம்பி பாதை அமைத்து புதிய பிட்டிங் மற்றும் மின் விளக்குகள் கீழ்கண்ட இடங்களில் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது

| வ.எண் | வார்டு எண் | தெரு பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 1 | புளிச்சக்காடு மேலத்தெரு | 3 |
| 2 | 1 | இனாம் குனத்தலப்பாடி | 2 |
| 3 | 4 | காமராஜ் அவென் 4 வது தெரு | 4 |
| 4 | 6 | சிதம்பரம் ரோடு குளத்துமேட்டு தெரு | 5 |
| 5 | 6 | புலிக்குடி சின்ன பள்ளிவாசல் தெரு | 5 |
| 6 | 6 | புலிக்குடி சலீம் தெரு | 6 |
| 7 | 20 | M.R ராதா நகர் | 4 |

அனுமதிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 8 | 20 | VNP நகர் | 4 |
| 9 | 21 | வீரம்மாள் நகர் | 3 |
| 10 | 13 | SKR நகர் | 3 |
| 11 | 22 | துறையூர் ரோடு | 10 |
| 12 | 21 | NGGO நகர் | 1 |
| 13 | 21 | VSR நகர் | 3 |
| 14 | 20 | கணபதி நகர் | 17 |
| கூடுதல் | | | 70 |

மேற்படி 70 இடங்களில் பொது மக்களின் நலன் கருதி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுறையின் படி தெரு விளக்கு பராமரிப்பு செய்து வரும் Sabari Electrical. No.5. Kathiresan Street. Gannamoorthi Nagar, Ambatur, Chennai நிறுவனத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.50 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1.மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்–3487/2019/இ1)

(ஒம்) .திரு.க.மெய்ப்பொருள்.B.E.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–24.10.2019

/உண்மை நகல்/

ஆணையர்(பொ),
சீர்காழி ந கராட்சி.